Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. STC 2218/2018 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.1 |
| Name: | திரு.பெருமாள்சாமி |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 01.06.2022 | |

**முதல் விசாரணை** : நேரம் : 11.49

நான் தற்போது வச்சக்காரப்பட்டி காவல்நிலையத்தில் சி.சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னதாக வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் சி.சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 30.01.2017 ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு வெம்பக்கோட்டை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் திரு.முத்துராஜ் அவர்களுடன் நானும் த.கா.669 திரு.நடராஜன் ,2496 திரு.மருதுபாண்டி ஆகியோர்களுடன் வெம்பக்கோட்டை காவல்நிலைய சரகத்தில் சேதுராமலிங்கபுரத்திற்கு தெற்கேயுள்ள வைப்பாற்று பகுதியில் ரோந்து சென்றபோது ஆற்றின் தெற்கு கரையோரம் TN 57 J 8726 என்ற பதிவு

எண்கொண்ட லோடு வேனில் கீழத்தாயில்பட்டியை சேர்ந்த வன்னியராஜ் மகன் செல்வமணி மற்றும் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இரும்பு தட்டில் மண்வெட்டியால் மணல் அள்ளிக்கொண்டிருந்தவர்கள் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓடி தலைமறைவாகிவிட்டார்கள். மணல் அள்ளிய இடத்தை பார்வையிட்டபோது TN 57 J 8726 டாடா பிக்கப் லோடு வேனில் சுமார் அரையூனிட் மணல் , மூன்று இரும்பு தட்டுகள், மூன்று மண்வெட்டிகள் இருந்தன. திருட்டுத்தனமாக டாடா பிக்கப் லோடு வேனில் அள்ளி வைத்திருந்த மணலின் மதிப்பு சுமார் ரூ.1000/– இருக்கும். எதிரிகள் எந்தவித அரசு அனுமதியும் இன்றி மணல் அள்ளிய டாடா பிக்கப் லோடு வேன் மற்றும் மூன்ற இரும்பு தட்டுகள் மற்றும் மூன்ற மண்வெட்டிகள் ஆகியவற்றை கைப்பற்ற அத்தாட்சி தயார் செய்து கையொப்பம் இட அந்த இடத்தில் தனிநபர் சாட்சி எவரும் இல்லாததால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையொப்பம் இட்டு சொத்தை சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த அத்தாட்சி தான். அதில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**அந்த அத்தாட்சி அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).கைப்பற்றப்பட்ட சொத்துகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும் . என்னிடம் காட்டப்படும புகைப்படத்தில் உள்ள டாடா பிக்கப் லோடு வேன் மற்றும் மண்வெட்டிகள்–3, இரும்பு தட்டுகள் –3 ஆகியவை அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துகள் தான். (**அந்த சீடியுடன் கூடிய புகைப்படம்அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எதிரி கைது செய்தும் காலை 10.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது தொடர்பாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . குறுக்கு விசாரணை இல்லை.

முடியும் நேரம் : 11.59